**கவனிக்க.-** 2016.11.11 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி IV(அ) பிரசுரிக்கப்படவில்லை.


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

**අංක 1994 - 2016 නොවැම්බර් මස 18 වැනි සිකුරාදා - 2016.11.18**

1994 ஆம் இலக்கம் – 2016 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 18 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி II – சட்ட சம்பந்தமானது

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் |
|---|---|
| சட்டங்கள் | - |
| சட்டமூலங்கள் | - |
| மேன்முறையீட்டு நீதிமன்றச் சட்ட அறிவித்தல்கள் | - |
| உயர் நீதிமன்ற அறிவித்தல்கள் | - |
| உயர் நீதிமன்ற குற்றவிசாரணை பற்றிய அறிவித்தல்கள் | - |
| மாவட்ட நீதிமன்ற, நீதிவான் நீதிமன்ற அறிவித்தல்கள் | - |
| கடனிறுக்க முடியாமைக்கான வழக்குகளின் அறிவித்தல்கள் | - |
| பிசுக்கால் மார்சல்மாரின் நியமனங்கள் | - |
| பிசுக்கால் விற்பனை பற்றிய அறிவித்தல்கள் | - |
| மரணசாதன வழக்குகளின் அறிவித்தல்கள் | - |
| சட்டக் கல்விச் சபையின் அறிவித்தல்கள் | - |
| நொத்தாரிசுமார் பெயர்ப்பட்டியல் | - |
| நானாவித அறிவித்தல்கள் | 264 |


**கவனிக்க.**–(i) லசாலியன் சமூக கல்விச் சேவைகள் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் 2016, யூலை மாதம் 08 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகின்றது.

(ii) ஆலோகா சமூக சேவை மன்றம் ( கூட்டிணைத்தல்) சட்டமூலம் 2016, ஓகத்து மாதம் 26 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகின்றது.

(iii) ஜயமக அபிவிருத்தி சமூக சேவைகள் அறக்கட்டளை மன்றம் ( கூட்டிணைத்தல்) சட்டமூலம் 2016, செத்தெம்பர் மாதம் 30 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகின்றது.

### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்,** அதாவது 2016, திசெம்பர் மாதம் 09 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2016, நவெம்பர் மாதம் 25 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**கங்கானி லியனகே,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2016 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 15 ஆந் திகதி.

இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

# நானாவித அறிவித்தல்கள்

## மேல் மாகாண மேல் நீதிமன்றம் (கொழும்பில் அதன் சிவில் நியாயாதிக்கத்தைப் பிரயோகிக்கையில்)

வழக்கு இலக்கம்: எச்.சீ.(சிவில்) 49/16 சீஓ
தன்மை : கம்பனியை ஒடுக்குதல்
ஒடுக்கு முறைகள்: பெறுமதி: ரூபா

கொழும்பு 2, நவம் மாவத்தை, இல. 46/46 ஆம் இடத்தின், கிரீன் லங்கா டவர் இன் கிரீன் லங்கா சிபிங் லிமிட்டட் பற்றிய விபரம் சம்பந்தமானது.

அத்துடன்

கிரீன் லங்கா சிபிங் லிமிட்டட் நீதிமன்றத்தினால் ஒடுக்குவதற்கான 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 534 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 270(e) பிரிவின் கீழ் செய்யப்படுகின்ற விண்ணப்பம் பற்றிய விடயம்.

சீனா குடியரசின் தாய்வான், தாய்பே 104 மின்க்சேன்க் ஈஸ்ட் வீதி, இல. 166 sec 2 இடத்தின் எவர்கிரீன் மெராயன் கோபரேசன் (தாய்வான்) லிமிட்டட்

மனுதாரர்

கொழும்பில் நடாத்தப்படும் (குடியியல் நீதிமன்ற அதிகாரங்களை நடைமுறைப்படுத்தும்) மேல் மாகாண மேல் நீதிமன்றத்தால் மேற்படி கம்பனியை ஒடுக்குவதற்கான மனுவொன்று மனுதாரரின் சார்பில் திருவாளர் டீ. எல். அன்ட் எவ்.டீ. சேரம் நிறுவனத்தால் 2016, செத்தெம்பர் 21 ஆம் திகதி மேற்படி நீதிமன்றத்துக்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது எனவும் மேற்படி மனு 2016, நவெம்பர் 23 ஆந் திகதி நீதிமன்றத்தின் முன்னிலையில் விசாரிக்கப்படுவதற்கென பணிக்கப்பட்டுள்ளது எனவும் மேற்படி மனுவின் மீது கட்டளையொன்று ஆக்கப்படுவதை ஆதரிக்கவோ ஆட்சேபிக்கவோ விரும்பும் மேற்படி கம்பனியின் கடன் தருநர் அல்லது உதவுதொகை செலுத்துநர் எவரும் விசாரணையின் போது அந்நோக்கத்திற்கென நேரிலோ அல்லது தமது சட்டத்தரணியின் மூலமோ தோற்றலாம். மனுவின் பிரதியொன்றை தேவைப்படுத்தும் மேற்படி கம்பனியின் கடன் தருநர் அல்லது உதவுதொகை செலுத்துநர் எவருக்கும் அதற்கென விதித்துரைக்கப்பட்ட கட்டணத்தின் கொடுப்பனவின் மீது அப் பிரதி கொடுத்துதவப்படும் என்று இத்துடன் அறியத் தருகின்றது.

திருவாளர்கள் டீ. எல். அன்ட் எவ். டீ. சேரம்,
சட்டத்தரணிகள்,

47, அலெக்சாந்திரா பிளேஸ்,
கொழும்பு 7.

**குறிப்பு**: மேற்படி மனு விசாரணை செய்யப்படும் போது நேரில் தோற்ற உத்தேசிக்கும் ஆளெவரும் அவ்வாறு செய்வதற்காக தமது உத்தேசம் பற்றிய எழுத்திலான அறிவித்தலை திருவாளர்கள் டீ.எல். அன்ட் எவ். டீ. சேரம் நிறுவனத்திற்கு சேர்ப்பித்தல் வேண்டும் அல்லது அஞ்சலில் அனுப்புதல் வேண்டும். அறிவித்தலில் ஆளின் பெயரும், முகவரியும் அல்லது நிறுவனம் எனின் நிறுவனத்தின் பெயரும் முகவரியும் குறிப்பிடப்பட்டு ஆளினால் அல்லது நிறுவனத்தினால் அல்லது அவரது அல்லது அதன் சட்டத்தரணியால் (எவருமிருப்பின்) கையொப்பமிட்டு 2016, நவெம்பர் 22 ஆந் திகதியன்று பிற்பகல் 6.00 மணிக்கு பிந்தாமல் சேர்க்கப்படுதல் வேண்டும். அல்லது அஞ்சலில் அனுப்பப்படுமாயின் மேற்படி திகதியன்று பிற்பகல் 6.00 மணிக்கு பிந்தாமல் மேலே பெயர் குறிப்பிடப்பட்ட முகவரிக்கு கிடைக்கக் கூடியதாக போதிய கால அவகாசத்துடன் அஞ்சல்படுத்தல் வேண்டும்.

11-771

---

## பொலன்னறுவை பௌத்த சங்கத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்

மலித் ஜயதிலக ஆகிய என்னால், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு பாராளுமன்றத்தின் 48(1) ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் கீழ் "பொலன்னறுவை பௌத்த சங்கத்தைச் சட்டவாக்குதலுக்கானதொரு சட்டம்" எனப்படும் சட்டமூலமொன்றைப் பாராளுமன்றத்தில் அறிமுகஞ் செய்வதற்காக 1977 ஆம் இலக்க, 2016.07.22 ஆம் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையில் விடுக்கப்பட்ட அறிவித்தலை பின்வருமாறு திருத்துவதாக இத்தால் அறியத்தருகின்றேன்:-

"பொலன்னறுவை பௌத்த சங்கத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்"

மலித் ஜயதிலக,
பாராளுமன்ற உறுப்பினர்.

11-767